8th December 1961]

கொடுக்கப்பட்டு வருகிறது. யாருக்குக் கொடுத்தால் சீக்கிரத்தில் வேலை முடியுமோ அவர்களுக்குத்தான் கொடுப்பது வழக்கம். பீஸ் வொர்க்காக கொடுத்தால் வேலை சீக்கிரமாக நடக்கும் என்பதற்காக அப்படி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்படிக்குத்தான் அங்கு ரோடுகள் போடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

Cultural delegations

* 2196 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கலை சம்பந்தப்பட்ட குழுக்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும்போது மத்திய சர்க்கார் நமது சர்க்காரை கலந்து ஆலோசிப்பது உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : Not generally.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், ஜெனரலாக மத்திய சர்க்கார் நம்மை கேட்கவில்லை என்றாலும், இப்படி அனுப்பக்கூடிய நேரத்தில் நாமாகவே அவர்கள் நம்மைக் கலந்து கொண்டு அனுப்ப வேண்டும் என்கிற ஆலோசனையையாவது நம் சர்க்கார் மத்திய சர்க்காருக்கு அனுப்ப வேண்டும் என்கிற யோசனையையாவது நாம் அவர்களுக்குத் தெரிவிக்கக் கூடாதா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கொடுத்திருக்கிறோம். இப்பொழுது நம்மைக் கலந்துகொண்டு அவர்கள் ஆலோசிக்கிறார்கள்.

SRI K. VINAYAKAM : Sir, whereas it has been found that in the cultural delegations that are sent abroad, the Dravidian Culture is not properly represented and that the State Government are not consulted previously, would the Government insist that some artistes or persons who are authorities on the Dravidian Culture are also included so that their vision would be broadened and their shortsightedness would be decreased in future?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, we should make out a list firstly of persons who, according to the hon. Member, Sri K. Vinayakam, are experts in the Dravidian Culture and secondly persons who are shortsighted and thirdly, persons who will get cured of this shortsightedness through these trips abroad and on that basis we shall try to make a recommendation.

Jail Wardens (houses)

* 2197 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

போலீசாருக்கு நல்ல வசதியான வீடுகளாக கட்டிக் கொடுப்பதுபோல ஜெயில் வார்டர்களுக்கும் கட்டிக்கொடுக்க உத்தேசம் உண்டா ?

[8th December 1961

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Most of the Warders have already been provided with rent free quarters. Proposals for construction of quarters for those who have not been provided with quarters are examined by Government as and when received from the Inspector-General of Prisons.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், இந்த மூன்றுவது ஐந்தாண்டு திட்டத்தில் எங்கங்கே கட்டுவதாக உத்தேசம்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி இப்பொழுது என்னிடம் தகவல் இல்லை.

SRI N. MARUDACHALAM : ஸார், இப்பொழுது கட்டப்பட்டிருக்கும் வீடுகளுக்கு லைட் வசதி, தண்ணீர் வசதி முதலியவைகள் இல்லை. அந்த வசதிகளையெல்லாம் உடனடியாகச் செய்து கொடுக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM போலீஸ்காரர்களுக்குக் கட்டும்போது இந்த விஷயமும் கவனிக்கப்படும். போலீஸ்காரர்களுக்குக் கட்டிக் கொடுப்பதற்கு அங்கு அதற்கு என்று ஆபீசர்கள் இருக்கிறுர்கள். அவர்கள் கவனிப்பது போன்று இங்கும் ஆபீசர்கள் கவனம் செலுத்திஞல் இவர்களுக்கும் கட்டிக் கொடுக்கப்படும்.

Food Price

* 2198 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961 ஆகஸ்ட் மாதத்தில் மத்திய சர்க்கார் உணவமைச்சரிடம் மாநில உணவமைச்சர் விலைக்கொள்கையைக் குறித்து விவாதித்தாரா?

(இ) அப்படியாயின், அதன் விவரமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) No Sir.

(இ) Does not arise.

SRI S. M. ANNAMALAI : உணவு பண்டங்களில் விலை மேலும் உயர்ந்துகொண்டே போகிறதே அதைக் கட்டுப்படுத்துவதற்கு மூன்றுவது ஐந்தாண்டு திட்ட காலத்திலாவது வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தப் பிரச்னை ஒரு பெரிய பிரச்னை. இது தொடர்ந்து சர்க்காருடைய பரிசீலனையில் இருந்து வருகிறது. பொதுவாகவே குறைவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டுதான் வரப்படுகிறது. ஆனல் உயர்ந்துகொண்டே போகிறது என்று சொல்வதற்கு இல்லை. சென்ற ஆண்டுலிருந்த லிவிங் இண்டெக்ஸை விட இந்த ஆண்டு லிவிங் இண்டெக்ஸ் குறைவாகத்தான் இருக்கிறது.